# தமிழக மாநில தலைமைத் தகவல் ஆணையராக முன்னாள் டிஜிபி ஷகீல் அக்தர் நியமனம்



ஷகீர் அக்தர் கோப்புப் படம்.

**சென்னை:** தமிழகத்தின் மாநில தலைமைத் தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி ஷகீல் அக்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தமிழகத்தின் முன்னாள் டிஜிபி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பிஹார் மாநிலத்தைச் சேர்ந்தவர். 1989 ஆம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரியானார். அண்மையில்தான் சிபி - சிஐடி டிஜிபி பணியில் இருந்து ஓய்வு பெற்றார். இந்நிலையில் அவர் தமிழகத்தின் மாநில தலைமைத் தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி ஷகீல் அக்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்த மாநில தலைமைத் தகவல் ஆணையர் பதவியில் 3 ஆண்டுகள் அல்லது 65 வயதை எட்டும்வரை இருப்பார். இதில் எது குறைவான காலமோ அது அவரது ஓய்வுக்கான காலமாகக் கருதப்படும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில், தமிழக அரசின் சார்பில் கடந்த 2005-ம்ஆண்டு மாநில தகவல் ஆணையம் உருவாக்கப்பட்டது. கடந்த ஆறு

மாதங்களாக இந்தப் பதவி நிரப்பப்படாமல் இருந்தது. இது தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் எழுந்தன. இந்த நிலையில், தமிழக மாநில தலைமை தகவல் ஆணையராக முன்னாள் டிஜிபி ஷகில் அக்தரை ஆளுநர் ஆர்.என்.ரவி நியமித்துள்ளார்.

மேலும், மாநில தகவல் ஆணையர்களாக ஓய்வு பெற்ற ஏடிஜிபி தாமரைக் கண்ணன், வழக்கறிஞர் பிரியகுமார் டாக்டர் திருமலைமுத்து, மற்றும் பேராசிரியர் டாக்டர் எம்.செல்வராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்

## காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பு - ரூ.75.95 கோடியில் குறுவை தொகுப்பு திட்டம்

**மேட்டூர்**: காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீரை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். நடப்பு ஆண்டில் ரூ.75.95 கோடியில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படுவதாக முதல்வர் அறிவித்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம். இந்த ஆண்டில் அணையில் போதிய தண்ணீர் இருப்பதால், உரிய காலமான ஜூன் 12-ம்தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

சேலத்தில் கடந்த 2 நாட்களாக முகாமிட்டிருந்த முதல்வர், மேட்டூர் அணையில் நேற்று காலை நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, பிரதான மதகுகளை இயக்கி அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார். அணையில் இருந்து சீறிப் பாய்ந்து வெளியேறிய தண்ணீரில் மலர்களை தூவி வரவேற்றார்.

அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: தமிழகத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தவும் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறோம். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் மூலம் இதுவரை 23.54 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 1.50 லட்சம் இலவச விவசாய மின்இணைப்புகள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2021-ம் ஆண்டில் ரூ.61.90 கோடியில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டதில், 4.90 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. கடந்த 2022-ல் மேட்டூர் அணையில் இருந்து முன்னதாகவே, அதாவது மே 24-ம் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டது. ரூ.61.12 கோடியில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. 48 ஆண்டுகளில் இல்லாத வகையில், கடந்த ஆண்டில் குறுவை நெல் சாகுபடி 5.36 லட்சம் ஏக்கரை கடந்து, 12.76 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் ரூ.90 கோடியில் கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

தற்போது அரசு வேளாண் விரிவாக்க மையங்களிலும், தனியார் கடைகளிலும் குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான குறைந்த நாள் வயதுடைய நெல் ரக விதைகள், ரசாயன உரங்கள், உயிர் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

நிலத்தடி நீரை பயன்படுத்தி இதுவரை 1.60 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் நடவு பணி முடிந்துள்ளது. சமுதாய நாற்றங்கால் அமைத்து,

காவிரி நதிநீர் வந்தவுடன், நடவுபணியை உடனே தொடங்கும் வகையில் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்று, 3-வது ஆண்டாக மேட்டூர் அணையில் இருந்து உரிய காலத்தில் தண்ணீர் திறந்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நடப்பு ஆண்டில் ரூ.75.95 கோடியில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டத்தை அறிவிக்கிறேன். இத்திட்டத்தின்கீழ், ஏக்கருக்கு 45 கிலோ யூரியா, 50 கிலோ டிஏபி, 25 கிலோ பொட்டாஷ் என்ற விகிதத்தில், 2.50 லட்சம் ஏக்கருக்கு தேவையான ரசாயன உரங்கள் முழு மானியத்திலும், 1.24 லட்சம் ஏக்கருக்கு தேவையான நெல் விதைகள் 50 சதவீத மானியத்திலும், 15,818 ஏக்கருக்கு மாற்றுப் பயிர் சாகுபடி தொகுப்பும், 6,250 ஏக்கரில் பசுந்தாள் விதைகளும், 747 பவர் டில்லர்களும், 15 பவர் வீடர்களும் மானியத்தில் விநியோகம் செய்யப்படும். குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தால், நடப்பு ஆண்டில் 5 லட்சம் ஏக்கருக்கும் அதிகமாக குறுவை நெல் சாகுபடி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு முதல்வர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு,எம்ஆர்கே பன்னீர்செல்வம், மதிவேந்தன், எம்.பி.க்கள் கவுதம் சிகாமணி, எஸ்.ஆர்.பார்த்திபன், செந்தில்குமார், சின்ராஜ், ராஜேஷ்குமார், எம்எல்ஏக்கள் ராஜேந்திரன், சதாசிவம், நீர்வளத் துறை செயலர் சந்தீப் சக்சேனா, மாவட்ட ஆட்சியர் கார்மேகம், திருச்சி மண்டல தலைமை பொறியாளர் ராமமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மின்சார உற்பத்தி தொடக்கம்:** மேட்டூர் அணையில் இருந்துமுதல்கட்டமாக 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. மாலையில் 10 ஆயிரம் கனஅடியாக படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. 2024 ஜன.28-ம் தேதி வரை அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். இதன்மூலம் டெல்டா மாவட்டங்களான திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் உள்ள 16 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் அணை மின் நிலையம், சுரங்க மின் நிலையம், 7 கதவணைகளில் மின் உற்பத்தி தொடங்கியது.

**ஜம்மு காஷ்மீரில் 5.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்: டெல்லி, சுற்றுப் பகுதிகளிலும் உணரப்பட்ட அதிர்வு**

**புதுடெல்லி:** ஜம்மு காஷ்மீரின் தோடா பிராந்தியத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் 5.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் பாதிப்புகள் குறித்து இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை.

பூமிக்கு அடியில் 6 கி.மீ., தொலைவில் உருவான இந்த நிலநடுக்கமானது தலைநகர் டெல்லி உள்ளிட்ட வட இந்தியாவின் பல பகுதிகளிலும் உணரப்பட்டுள்ளது. இது குறித்து தேசிய நில அதிர்வு அறிவியல் ஆய்வு மையம் அதன் ட்விட்டர் பக்கத்தில், "5.4 ரிக்டர் அளவில், ஜூன் 13-ம் தேதி பிற்பகல் 1.30 அளவில் ஜம்மு காஷ்மீரின் தோடா பகுதியில் உணரப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளது.

இதேபோல், பாகிஸ்தானிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. முன்னதாக, செவ்வாய்க்கிழமை அதிகாலையில் காலையில் மியான்மரில் 3.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

ஜம்மு காஷ்மீரில் இன்று (ஜூன் 13) ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பள்ளிக் குழந்தைகள் அச்சமடைந்தனர். வியாபாரிகள் கடைகளை விட்டு வெளியேறினர். கடந்த வாரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை விட இன்று

ஏற்பட்ட நிலநடுக்கம் அதிகமாக இருந்ததாக உள்ளூர்வாசி ஒருவர் கூறியதாக தனியார் செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

## Cyclone Biparjoy | குஜராத்தில் கடற்கரையோர மக்களை வெளியேற்றும் பணி தொடக்கம்

**அகமதாபாத்:** அரபிக் கடலில் உருவெடுத்துள்ள பிப்பர்ஜாய் புயலால் அதிக பாதிப்பு ஏற்படலாம் என கணிக்கப்பட்டிருப்பதால், கடற்கரையில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவு வரை உள்ள மக்களை அப்புறப்படுத்துவதற்கானப் பணிகளை அம்மாநில அரசு தொடங்கி உள்ளது.

அரபிக் கடலில் தீவிர புயலாக உருவெடுத்துள்ள பிப்பர்ஜாய், நாளை மறுநாள் அதி தீவிர புயலாக மாறி குஜராத்தின் சவுராஷ்ட்ரா பகுதிக்கும், ஜாக்குவா போர்ட்டுக்கும் இடையே கரையைக் கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதையடுத்து குஜராத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, கடற்கரையோரத்தில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவுக்குள் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தும் பணிகளை குஜராத் அரசு தொடங்கி உள்ளது. கட்ச், போர்பந்தர், தேவ்பூமி துவாரகா, ஜாம்நகர், ஜூனாகட், மோர்பி ஆகிய கடற்கரையோர மாவட்டங்களில் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று அதிகாலை நிலவரப்படி பிப்பர்ஜாய் புயல், போர்பந்தருக்கு தென்மேற்கே 290 கிலோ மீட்டர் தொலைவிலும், ஜாக்குவா போர்ட் நகருக்கு தெற்கு-தென்மேற்கு திசையில் 360 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது. இந்த புயல் கடரையைக்

கடக்கும்போது மணிக்கு 120 கிலோ மீட்டர் முதல் 145 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் காற்று வீசக்கூடும்.

மீட்புப் பணிகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மீட்பு ஆணையர் அலோக் பாண்டே, "கடற்கரையோர மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தும் பணி இரண்டு கட்டங்களாக நடைபெறும். முதலில், கடற்கரையில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவு வரை உள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். இரண்டாம் கட்டத்தில், 5 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவு வரை உள்ளவர்கள் பாதுகாப்பு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அவ்வாறு அழைத்துச் செல்லப்படும்போது குழந்தைகள், கர்ப்பிணிகள், வயதானவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வெளியேற்றப்படும் மக்களுக்குத் தேவையான இடம், உணவு, மருந்துப்பொருட்கள் போன்றவற்றை வழங்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 12 குழுக்களும், மாநில பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 12 குழுக்களும் ஈடுபடுத்தப்படுவார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

"புயல் காரணமாக படகுகளை துறைமுகங்களில் நிறுத்தும் பணி நேற்றே தொடங்கிவிட்டது. ஜாக்குவா நகர் மற்றும் அதனை ஒட்டிய கடற்கரை பகுதிகளைச் சேர்ந்த படகுகள், அதிக சேதாரம் ஏற்படாமல் தவிர்க்கும் நோக்கில் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. கண்ட்லா துறைமுகம் மூடப்பட்டு விட்டது. அந்த துறைமுகத்தைச் சுற்றி வசித்து வந்த துறைமுகப் பணியாளர்கள் உள்பட சுமார் 3 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்" என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## டென்னிஸ் தரவரிசையில் ஜோகோவிச் முதலிடம்



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சர்வதேச டென்னிஸ் தரவரிசை பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார்.

பிரெஞ்ச் ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 7-6 (7-1), 6-3, 7-5 என்ற செட் கணக்கில் நார்வே வீரர் காஸ்பர் ரூட்டை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் நோவக் ஜோகோவிச் வென்றுள்ள 23-வது பட்டம் இதுவாகும். இதன் மூலம் டென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்றிருந்த ஸ்பெயினின் ரஃபேல் நடாலின் (22 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள்) சாதனையை முறியடித்துள்ளார் ஜோகோவிச். பிரெஞ்சு ஓபனில் வாகை சூடிய ஜோகோவிச், டென்னிஸ் தரவரிசை பட்டியலில் 2 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ளார். முதலிடம் வகித்த ஸ்பெயினின் கார்லோஸ் அல்கரஸ் 23-வது இடத்துக்கு தள்ளப்பட்டார். இதேபோன்று ரஷ்யாவின் டேனியல் மேத்வதேவும் ஓர் இடம் பின்தங்கி 3-வது இடத்தில் உள்ளார்.

இறுதிப் போட்டியில் தோல்வியை சந்தித்த காஸ்பர் ரூட் 4-வது இடத்தில் தொடர்கிறார். ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் (கிரீஸ்), ஹோல்கர் ரூன் (டென்மார்க்), ஆந்த்ரே ரூப்லெவ் (ரஷ்யா), டெய்லர் பிரிட்ஸ் (அமெரிக்கா), ஜன்னிக் ஷின்னர் (இத்தாலி), கரண் கச்சனோவ் (ரஷ்யா) ஆகியோர் முறையே 5 முதல் 10-வது இடங்களில் உள்ளனர். 14 முறை பிரெஞ்சு ஓபனில் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபேல் நடால் 121 இடங்கள் பின்தங்கி 136வது இடத்தில் உள்ளார். இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர், நீண்ட நாட்களாக டென்னிஸ் போட்டிகளில் விளையாடாமல் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டிஜிட்டல் மயத்தால் இந்தியாவில் புரட்சிகரமான மாற்றம்: ஜி-20 அமைப்பின் மாநாட்டில் பிரதமர் மோடி பெருமிதம்




**புதுடெல்லி**: டிஜிட்டல் மயத்தால் இந்தியாவில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜி-20 அமைப்புக்கு இந்தியா தலைமை ஏற்றுள்ளது. இதையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் ஜி -20 மாநாடுகள், கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. இந்த வரிசையில் உத்தர பிரதேசத்தின் வாரணாசியில் ஜி-20 அமைப்பின் மாநாடு கடந்த 11-ம் தேதி தொடங்கியது. இதன் நிறைவு விழாவில்

பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி வாயிலாக பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது:

ஜனநாயகத்தின் தாயாக விளங்கும் இந்தியாவின் மிகப் பழமையான வாரணாசி எனும் காசி நகரில் மாநாடு நடந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஞானம். விவாதம், கலாச்சாரம், ஆன்மிகத்தின் மையமாக இந்த நகரம் திகழ்கிறது. நாட்டின் அனைத்து பகுதி மக்களையும் காசி ஒன்றிணைக்கிறது. காசி மாநாட்டுக்கு வருகை தந்த ஜி20 உறுப்பு நாடுகளின் அமைச்சர்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.

கரோனா பெருந்தொற்று காரணமாக உலகின் தெற்கு பகுதி நாடுகள் மிக கடுமையாக பாதிக்கப்பட்டன. உக்ரைன் போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சர்வதேச அளவில் உணவு, எரிபொருள். உரம் ஆகியவற்றுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்த சூழலில் காசி மாநாட்டில் நீங்கள் எடுக்கும் முக்கியமான முடிவுகள் மனித குலத்துக்கு மிகுந்த பலன் அளிக்கும்.

நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால் மாற்றங்களை ஏற்படுத்தலாம். நமது செயல்பாடுகள் நேர்மையாக இருக்க வேண்டும். நமது முயற்சிகள் அனைவருக்கும் பலன் அளிப்பதாக இருக்க வேண்டும். நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்ட முதலீடுகள் அவசியம். இதற்கு ஏற்ற வகையில் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் தேவைஉள்ள நாடுகளுக்கு கடன் கிடைக்கஏற்பாடு செய்ய வேண்டும். பல நாடுகள்எதிர்கொள்ளும் நிதி சார்ந்த பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு காண வேண்டும்.

**மாவட்ட வளர்ச்சிக்கான திட்டம்:** இந்தியாவில் முன்னேறத் துடிக்கும் மாவட்டங்கள் என்ற திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது. இதன்படி,100-க்கும் மேற்பட்ட பின்தங்கிய மாவட்டங்களில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாவட்டங்கள் இப்போது நாட்டின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக மாறியுள்ளன. ஜி - 20 உறுப்பு நாடுகளின் மேம்பாட்டு அமைச்சர்கள், முன்னேறத் துடிக்கும் மாவட்டங்கள் திட்டத்தை ஆய்வு செய்து அவரவர் நாடுகளில் இந்த திட்டத்தை செயல்படுத்தலாம்.

'தரவு இடைவெளி' என்பது சர்வதேச பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது. இதை எதிர்கொள்ள ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தொழில்நுட்பங்களை பரஸ்பரம் பகிர்ந்துகொண்டால் தரவு இடைவெளி பிரச்சினைக்கு எளிதாக தீர்வு காண முடியும்.

டிஜிட்டல்மயத்தால் இந்தியாவில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொழில்நுட்பத்தின் உதவியால் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகிறோம். எங்களது அனுபவங்களை நட்பு நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறோம்.

**பெண்களுக்கு அதிகாரம்:** இந்தியாவில் நதிகள், மரங்கள், மலைகள் மற்றும் இயற்கையின் அனைத்துஅம்சங்களுக்கும் மரியாதை செலுத்தி வருகிறோம். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வருகிறோம். கடந்த ஆண்டு ஐ.நா. பொதுச் செயலாளருடன் இணைந்து லைப் இயக்கத்தை தொடங்கி வைத்தேன். இதன்மூலம் பருவநிலை மாற்றத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வளர்ச்சி இலக்குகளை எட்ட பாலின சமத்துவம், மகளிர் அதிகாரமளித்தல் அவசியம். இந்தியாவில் பெண்களுக்கு அதிகாரமளிப்பதுடன் நின்றுவிடவில்லை.

அதையும் தாண்டி பெண்கள் தலைமைக்குமுன்னுரிமை அளித்து வருகிறோம். இந்தியாவில் வளர்ச்சி மற்றும் மாற்றத்துக்கான முகவர்களாக பெண்கள் திகழ்கின்றனர். பெண்கள் தலைமையிலான வளர்ச்சிக்கான செயல் திட்டத்தை ஜி-20அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் பின்பற்ற வேண்டும்.

மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர்கள் புனித காசி நகரை சுற்றிப் பார்க்க வேண்டுகிறேன். அப்போதுதான் காசியின் எழுச்சியை உணர முடியும். இது என்தொகுதி என்பதால் உரிமையுடன் கூறுகிறேன். கங்கை ஆரத்தியை கண்டுகளியுங்கள். சாரநாத்தையும் பார்வையிடுங்கள். இவை புதிய அனுபவத்தை தரும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினா

## கோவின்' தகவல்கள் கசிவு | மோடி அரசின் மிகப் பெரிய தரவு மீறல்: எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

**புதுடெல்லி:** மூத்த அரசியல்வாதிகள் உள்பட கோவிட் 19 தடுப்பூசி செலுத்திக்கொண்ட அனைத்து இந்தியர்களின் தனிப்பட்ட தகவல்களும் இணையத்தில் இலவசமாகக் கிடைப்பதாக திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

இது குறித்து திரிணமூல் காங்கிரஸின் தேசிய செய்தித் தொடர்பாளர் சாகேத் கோகலே தனது ட்விட்டர் பக்கத்தில் சில ஸ்கிரீன் ஷாட்டுக்களைச் பகிர்ந்து நீண்டதொரு பதிவிட்டுள்ளார். அதில், "மோடி அரசில் மிகப் பெரிய அளவில் தரவு மீறல்கள் நடந்துள்ளன. கோவிட் தடுப்பூசி செலுத்திக் கொண்ட அனைத்து இந்தியர்களின் மொபைல் எண், ஆதார் எண், பாஸ்போர்ட் எண், வாக்காளர் அடையாள அட்டை எண், குடும்ப உறுப்பினர்கள் விவரம் உள்ளிட்ட அனைத்து தனிப்பட்ட தரவுகளும் இணையத்தில் இலவசமாக கிடைக்கின்றன. இது தேசிய அளவில் மிகவும் கவலையளிக்கக் கூட ஒன்று" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், திரிணமூல் காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் டெர்க் ஓ பிரைன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஜெய்ராம் ரமேஷ், கே.சி.வேணுகோபால், சுகாதாரத் துறைச் செயலர் ராஜேஷ் பூஷன், மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிபன்ஷ் நாராயன் சிங், மாநிலங்களவை உறுப்பினர்கள் சுஷ்மிதா தேவ், அபிஷேக் மனு சிங்வி, ரஞ்சய் ராவத் ஆகியோர்களின் தகவல்களுடன் சில ஊடகவியளார்களின் தனித் தகவல்கள் அடங்கிய ஸ்க்ரீன் ஷாட்டுகளை பகிர்ந்து எழுப்பிய கேள்விகள்:

> மோடி அரசு பலமான தரவுகள் பாதுகாப்பினை பின்பற்றுகிறது எனக் கூறிவரும் நிலையில், கோவிட் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களின் தனிப்பட்ட தகவல்கள் எப்படி வெளியே கசிந்தன?

> உள்துறை அமைச்சகம் உள்ளிட்ட மோடி அரசுக்கு இந்தத் தகவல் கசிவு குறித்து ஏன் எதுவும் தெரியவில்லை. மேலும், இது குறித்து மக்களுக்கு ஏன் தெரிவிக்கப்படவில்லை?

> ஆதார், பாஸ்போர்ட் எண் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த தனிப்பட்ட தகவல்களை கையாளும் உரிமையை மோடி அரசு யாருக்கு வழங்கியது?

> இதற்கு பொறுப்பான மின்னணு தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு மற்றும் ரயில்வே துறை அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவின் திறமையின்மை மோடி அரசால் இன்னும் எவ்வளவு காலத்துக்கு புறக்கணிக்கப்படும்?

**கார்த்திக் சிதம்பரம் கேள்வி:** கோவின் தனித் தரவுகள் கசிவு குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் எம்.பி. கார்த்திக் சிதம்பரம், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவ் இதற்கு பதில் அளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "தனது டிஜிட்டல் இந்தியா வெறியில், இந்திய அரசானது நாட்டு மக்களின்

தனியுரிமைகளை மறந்துவிட்டது. கோவிட் 19 தடுப்பூசி எடுத்துக்கொண்ட ஒவ்வொரு இந்தியரின் தனிப்பட்ட தகவல்களும் பொதுவெளியில் காணக்கிடைக்கின்றன. இவ்வாறு நடக்க யார் அனுமதித்தது? இந்திய அரசு எதற்காக தகவல் பாதுகாப்புச் சட்டத்தை வைத்துள்ளது? மத்திய அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவ் கட்டாயம் பதில் அளிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

**சுப்ரியா சுலே கேள்வி:** "இந்தச் செய்திகள் உண்மையாக இருக்கும் பட்சத்தில், அது மிகவும் கவலைக்குரிய ஒன்று மட்டும் இல்லை, ஏற்றுக்கொள்ள முடியாததும் கூட! அரசு உடனடியாக இது குறித்து தெளிவுபடுத்த வேண்டும். இந்த மீறலுக்கு காரணமானவர்கள் கண்டறிந்து, அதற்கு பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்" என்று தேசியவாத காங்கிரஸ் கட்சியின் எம்.பி சுப்ரியா சுலே தெரிவித்துள்ளார்.

**தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கவில்லை:** எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு அரசுத் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில், கோவிட் 19 தடுப்பூசி பதிவுத் தளமான கோவின் தளத்தில் ஒருவரின் பிறந்த தேதி, முகவரி உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்கள் கேட்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கோவின் தளத்தில், ஒருவர் முதல் தவணை, இரண்டாவது தவணை, முன்னெச்சரிக்கைத் தவணை தடுப்பூசிகள் எடுத்துக்கொண்ட தேதிகள் மட்டுமே சேகரிக்கப்படுகின்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய சுகாதாரத் துறை கோவின் தரவுகள் கசிந்தது தொடர்பாக விரிவான அறிக்கைகள் தயார் செய்து வருகிறது. அது குறித்த தகவல்கள் ஆராயப்பட்டு வருகிறது என்றும் மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.